TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 -OCT 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

வியாழக்கிழமை, 1970 செப்டம்பர் 3.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. சி. கோதண்டராம பாகவதர் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1962-லிருந்து 1967-ஆம் ஆண்டுவரை ஆரணி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. சி. கோதண்டராம பாகவதர் அவர்கள் 2—9—1970-ம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும், அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

2. வினாக்கள்—விடைகள்.

(வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்)

வித்துவான் பட்டத்திற்குப் பதில் புலவர் பட்டம்.

* 210 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை சர்வகலாசாலையில் தற்போது வழங்கப்பட்டு வரும் வித்துவான் பட்டத்திற்கு பதிலாக புலவர் பட்டம் வழங்க சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு இம்மாநில அரசு பரிந்துரை செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: ஆம்.

(வினா எண் 210 விடையளிக்கப்பட்டது.)

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, 'வித்வான்' என்ற சொல்லுக்கும் 'புலவர்' என்ற சொல்லுக்கும் அடிப்படையில் என்ன வித்தியாசம் இருக்கிறது? 'வித்வான்' என்ற சொல் வடமொழிச் சொல்லாகவும், 'புலவர்' என்ற சொல் தமிழ் சொல்லாகவும் இருக்கின்றன என்பதைத் தவிர, தகுதியில் வித்தியாசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 'வித்வத்' பெறுவதன் காரணமாக 'வித்வான்' என்ற வடமொழிச் சொல்லும், புலமை பெறுவதன் காரணமாகப் 'புலவர்' என்ற தமிழ்ச் சொல்லும் அமைந்திருக்கின்றன. தமிழ் படித்துவிட்டு வருகிறவர்களுக்குப் 'புலவர்' என்ற பட்டம் கொடுப்பதென்கிற முறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நீண்ட பெருங்காலமாக இருந்துவருகிறது. அதையொட்டி, சென்னைப் பல்கலைக் கழகத்திலும், மதுரைப் பல்கலைக் கழகத்திலும் அதே பெயரை வைப்பது பொருத்தமானது என்ற வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. ம. பொ. சிவஞானம்: தலைவர் அவர்களே, 'புலவர்' என்பது ஒரு பட்டமாகத்தான் வழங்கப்படுகிறதே தவிர, ஒரு 'டிக்ரி' யாக அது கருதப்படுவதில்லை. இதனால், புலவர் பட்டம் பெற்று வெளியே வரும்போது, பிற டிக்ரியாளர்களுக்குச் சமமாக நடத்தப்பட முடியாமல் இருக்கிறது. ஆகவே, 'புலவர்' என்ற பட்டத்தை 'டிக்ரி' யாக மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அது பல்கலைக் கழகத்தினால் முடிவு செய்யப்பட வேண்டும். டிக்ரியாக மாற்ற வேண்டுமென்றால், பி.ஏ., பி.எஸ்.ஸி., பி.காம். போன்ற பட்டப் படிப்பு படித்து வருகின்றார்களே, அவர்களோடு இவர்களைச் சேர்க்க வேண்டிவரும். அதனால்தான் டிக்ரியாகக் கொள்ளாமல் பட்டமாகக் கொள்ளப்படுகிறது. பி.ஏ. பட்டப் படிப்புக்குத் தமிழுடன் ஆங்கிலமும் ஒரு பகுதி எடுத்துப் படிக்க வேண்டும். அந்த வகையில் பட்டம் பெறலாம். 'புலவர்' படிப்பையே பட்டப் படிப்புக்குச் சரிசமமாகக் கொண்டுவர வேண்டுமென்றால், பல்கலைக்கழகந்தான் இதற்குள்ள தகுதியை நிர்ணயித்து அதனுடைய அடிப்படையில் பல்கலைக் கழகம் முடிவு செய்யவேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: தலைவர் அவர்களே, 'டிக்ரி' என்றால் பெயருக்குப் பின்னால் போட்டுக்கொள்ள வேண்டும். 'புலவர்' என்றால் பெயருக்கு முன்னால் போட்டுக்கொள்ள கவுரவமாக இருக்கும். ஆகவே, 'டிக்ரி'யைவிடப் 'புலவர்' பட்டம் கவுரவமானது என்பதைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ளுகிறதா?

(விடை இல்லை)

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, 'வித்வான்' என்பதைப் 'புலவர்' என்று ஆக்கியமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். புலவராக மாற்றியும் 'டைடில்' என்ற நிலையில்தான் வழங்கப்படுகிறது. நான்காண்டுகள் படித்துத் தேர்வு எழுதி வெளிவருகிற புலவர்களுக்கு டிக்ரியாக வழங்குவதுதான் பொருத்தமுடையதாகும். அதனால் 'டைடில்' என்ற நிலையை மாற்றி, டிக்ரியாக்குவதற்கு அரசு வலியுறுத்துமா என்று அறிய விழைகிறேன்.

1970 செப்டம்பர் 3]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சி. அவர்கள் அந்த வினாவைத் தான் எழுப்பினார்கள். 'டைடில்' என்றிருப்பதை 'டிக்ரி'யாக மாற்றவேண்டுமானால் அதற்குச் சில விதிமுறைகளையும், தகுதிகளையும் பல்கலைக்கழகம் வகுத்திருக்கின்றது. அந்த அடிப்படையில் தான் டிக்ரி வழங்க முடியும். நான்காண்டுகள் படித்திருக்கிறார்கள் என்ற ஒரு காரணத்தினாலேயே டிக்ரியாக்க வேண்டுமென்றால் அதற்கு விதிமுறை இடம் தருவதில்லை; பல்கலைக் கழகம்தான் ஆராய வேண்டும். அகடெமிக் கவுன்சில், சின்டிகேட் போன்றவைதான் அது பற்றி முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

தமிழ் கல்லூரி மாணவர்களுக்கு உதவித்தொகை.

*211. வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) தனித் தமிழ் கல்லூரியில் பயிலும் மாணாக்கரில் இத்துணைப் பேருக்குத்தான் மாநில அரசினர் உதவித் தொகை கொடுக்கப்பட வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், எவ்வாண்டிலிருந்து? எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இத்திட்டம் கடந்த பல ஆண்டுகளாகச் செயலிலிருந்து வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்ட படிப்பு உதவித் தொகை வருமாறு:—

பாடமுறை.	படிப்பு உதவித்தொகைகளின் எண்ணிக்கை.	திங்கள் ஒன்றுக்கு உதவித் தொகை.
		ரூபாய்.
வித்துவான்	13	6
சிரோன்மணி	6	6
மகளிர்க்கான சிறப்புப் படிப்பு உதவித் தொகைகள்.	2	15

புலவர் பொ. பொன்னம்பலம்: தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே, தனித் தமிழ்க் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு இருக்கக்கூடிய வரையறையை எடுத்துவிட்டு, தகுதியுடைய அனைவருக்கும் உதவித்தொகை வழங்க அரசு முற்படுமா, உதவித் தொகையைக் கொஞ்சம் கூடுதலாக வழங்கவும் அரசு ஆலோசிக்குமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. படிப்பை முடித்துவிட்டு, அதற்குப் பிறகு நான்காண்டுகள் கலைக் கல்லூரியில் டிக்ரி படிப்புப் படிக்கிறார்கள். அதுபோல்தான் தமிழ்க் கல்லூரியிலும் நான்கு ஆண்டுகள் 'புலவர்' படிப்புப் படிக்கிறார்கள். கலைக்கல்லூரியில் படிக்கிறவர்களுக்கு ஆண்டொன்